17

## திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர் : திரு.ந.விஜயராஜ்,எம்.ஏ.,

ந.க.20533/2023/அ4 நாள்: 10.06.2024

பொருள் : பொதுப்பணியாளர் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - நேரடி நியமனம் - தொகுதி-IV – 24.07.2022 அன்று தேர்வு நடைபெற்றது - இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டது - திருப்பூர் மாவட்டத்திற்கு - ஒதுக்கீடு செய்து பெயர் பட்டியல் வரப்பெற்றது - பணியிடம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது

படிக்கப்பட்டவை
1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடித எண்.1833/PSD-I/2023 நாள்:22.08.2023.
2. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.20533/2023/அ4, நாள்:22.09.2023.
3. திருப்பூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கடித ந.க.எண்.0232/ஆ4/2024 நாள்:14.05.2024.
4. தொடர்புடைய ஆவணங்கள்

* * * * * *

**உத்தரவு :-**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி-IV 24.07.2022 அன்று நடைபெற்ற தேர்வில் நேரடி நியமன இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக தேர்வு செய்யப்பட்டு, திருப்பூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.A.வீரக்குமார் என்பவர் பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி தனியருக்கு தமிழ்வழிக்கல்வி மெய்தன்மை அறிக்கை வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் பணிபுரியும்அலுவலகம் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியேற்ற நாள் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறைப் படுத்தும் தேதி |
|---|---|---|---|
| 1 | திரு.A.வீரக்குமார்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், திருப்பூர்.<br>(மாற்றுப்பணியில் வட்டாட்சியர் அலுவலகம், மடத்துக்குளம்.) | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |

2) மேற்சொன்ன இளநிலை வருவாய் ஆய்வாளரின் பணியானது தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV (Group –IV)"

3) தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் குறித்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய அலுவலகத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/-ந.விஜயராஜ்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
திருப்பூர்.

பெறுநர்
திரு.A.வீரக்குமார்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், திருப்பூர்.
- ( தொடர்புடைய அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல் : மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருப்பூர்.
நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர்.
நகல் : மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர்.
நகல் : அ4 இருப்புக் கோப்பிற்கு.

// உண்மை நகல் // உத்தரவுப்படி //

அலுவலக மேலாளர் (பொது)
10/06/24

10/6/24